# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW21

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. S.கணேசன் | Caste | : | |
| S/o. | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 15.10.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A1 to A3 present.

முதல் விசாரணை;

நான் தற்போது ஆத்தூர் சார்பு நீதிமன்றத்தில் சார்பு நீதிபதியாக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 02.06.2016 முதல் 30.04.2019 வரை சேலம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.5 ஆக பணியில் இருந்தபோது மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை சேலம் அவர்களிடமிருந்து சங்ககிரி காவல்நிலைய குற்ற எண்.196/2018 இதச பிரிவு 302 வழக்கு சம்மந்தப்பட்ட சம்பவ சாட்சிகள் 1.பொன்னுசாமி, வயது 65, த/பெ.செம்பண்ணன், காந்திநகர், வைகுந்தம், சங்ககிரி, 2.ரவிகுமார்,

வயது 43, த/பெ.ராமசாமி, பச்சமலை அடிவாரம், ஊட்டிமலைநகர், கோபி, தற்போது சேட்டுதோட்டம், குன்னிபாளையம், மகுடஞ்சாவடி, சங்ககிரி, 3.ஜெயராமன், வயது 62, த/பெ.பழனிகவுண்டர், வண்டிமேடு, குட்டப்பட்டிகிராமம், மேச்சேரி தாலுகா, தற்போது அம்மன் ஓட்டல், வைகுந்தம், ஆகியோர்களை வைத்து சந்தேக எதிரிகள் 1.சந்திரசேகர், வயது 31, த/பெ.சின்னுசாமி, காளிப்பட்டி பிரிவு ரோடு, வைகுந்தம், 2. பிரகாஷ் என்கிற சிவபிரகாஷ், வயது 29, த/பெ.ராஜா, கீழ்குள்ளவீரன்பட்டி, மாசிலாபாளையம், மேட்டுர், 3.அருண் (எ)அருண்குமார், வயது 24, த/பெ.கண்ணையன், அம்மாள் ஏரி ரோடு, தாதாகாப்பட்டி சேலம், ஆகியோர்களை அடையாளம் காட்டஅடையாள அணிவகுப்பு நடத்தக்கோரி மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை அவர்களிடமிருந்து 24.05.2018ம் தேதி புலன் விசாரணை அதிகாரியால் கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின்பேரில் 28.05.2018ம் தேதியில் மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், சேலம் அவர்களால் R0C. NO.3418/2018ல் நீதித்துறை நடுவர் எண்.5 சேலம் ஆகிய என்னை மேற்கண்ட அடையாள அணிவகுப்பு நடத்த உத்தரவிடப்பட்டது.

அதன் படி மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், சேலம் அவர்களிடமிருந்து மேற்கண்ட வழக்கில் புலன் விசாரணை அதிகாரி சமர்ப்பித்த அடையாள அணிவகுப்பு வேண்டுகோள் கடிதம், வழக்கின் வரலாறு, முதல் தகவல் அறிக்கை மற்றும் நீதிமன்ற காவல் உத்தரவு வேண்டுகோள் கடிதம், தலைமை நீதித்துறை நடுவர், சேலம் அவர்களின் உத்தரவு, ஆகியவைகள் 28.05.2018ம் தேதி நீதிமன்றத்திற்கு

கிடைக்கப்பெற்றது. புலன் விசாரணை அதிகாரியின் அடையாள அணிவகுப்பு வேண்டுகோள் கடிதம் குற்றவியல் பல்வகை மனு எண்.2501/2018 ஆக இந்நீதிமன்றத்தால் என்னால் கோப்பிற்கு எடுக்கப்பட்டது. பின்னர் என்னுடைய விசாரணையில் சந்தேக எதிரிகள் 1.சந்திரசேகர், வயது 31, த/பெ.சின்னுசாமி, காளிப்பட்டி பிரிவு ரோடு, வைகுந்தம், 2. பிரகாஷ் என்கிற சிவபிரகாஷ், வயது 29, த/பெ.ராஜா, கீழ்குள்ளவீரன்பட்டி, மாசிலாபாளையம், மேட்டூர், 3.அருண் (எ)அருண்குமார், வயது 24, த/பெ.கண்ணையன், அம்மாள் ஏரி ரோடு, தாதாகப்பட்டி சேலம், ஆகியோர் சேலம் மத்திய சிறையில் இருப்பதாக தெரிய வந்ததில் சந்தேக எதிரிகள் குறித்து அடையாள அணிவகுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டு சேலம் மத்திய சிறையில் 01.06.2018ம் தேதி அடையாள அணிவகுப்பு நடத்த இருப்பது குறித்து தெரிவித்து உரிய முன்னேற்பாடுகள் செய்ய குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.5 சேலம் D.No.1057/2018 Date 29/05/2018ல் சந்தேக எதிரிகள் குறித்து அடையாள அணிவகுப்பு நடத்த சேலம் மத்திய சிறைக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

சாட்சிகள் 1.பொன்னுசாமி, வயது 65, த/பெ.செம்பண்ணன், காந்திநகர், வைகுந்தம், சங்ககிரி, 2.ரவிகுமார், வயது 43, த/பெ.ராமசாமி, பச்சமலை அடிவாரம், ஊட்டிமலைநகர், கோபி, தற்போது சேட்டுதோட்டம், குன்னிபாளையம், மகுடஞ்சாவடி, சங்ககிரி, 3.ஜெயராமன், வயது 62, த/பெ.பழனிகவுண்டர், வண்டிமேடு, குட்டப்பட்டி கிராமம், மேச்சேரி தாலுகா, தற்போது அம்மன் ஓட்டல், வைகுந்தம், ஆகியோர்களுக்கு 01.06.2018ம் தேதி சேலம் மத்திய சிறையில் நடக்க இருக்கும்

அடையாள அணிவகுப்பில் கலந்து கொள்ள அழைப்பாணை 29.05.2018ல் அனுப்பினேன். பின்னர் 01.06.2018ம் தேதி காலை 10.00 மணிக்கு மேற்படி சாட்சிகள் 1.பொன்னுசாமி, வயது 65, த/பெ.செம்பண்ணன், காந்திநகர், வைகுந்தம், சங்ககிரி, 2.ரவிகுமார், வயது 43, த/பெ.ராமசாமி, பச்சமலை அடிவாரம், ஊட்டிமலைநகர், கோபி, தற்போது சேட்டுதோட்டம், குன்னிபாளையம், மகுடஞ்சாவடி, சங்ககிரி, 3.ஜெயராமன், வயது 62, த/பெ.பழனிகவுண்டர், வண்டிமேடு, குட்டப்பட்டிகிராமம், மேச்சேரி தாலுகா, தற்போது அம்மன் ஓட்டல், வைகுந்தம், ஆகியோர்களை புலன் விசாரணை அதிகாரி சேலம் மத்திய சிறைச்சாலை வாயிலில் ஆஜர்படுத்தினார். சாட்சிகளிடம் அழைப்பாணையை பெற்று விசாரித்து அடையாள சான்று சரிபார்த்து சாட்சிகளை உறுதி செய்து கொண்டேன். நான் அடையாள அணிவகுப்பு நடத்த வந்திருப்பது குறித்து சாட்சிகளிடம் தெரிவித்தேன். சாட்சிகளை சிறை வாயிலில் காத்திருக்கும்படி கூறிவிட்டு நானும் எனது அலுவலக உதவியாளர் ராஜா என்பவரும் சிறைக்குள் சென்றோம். அடையாள அணிவகுப்பு நடத்த வந்திருப்பது குறித்து உதவி ஜெயிலர் அவர்களிடம் தெரிவித்தேன். அவர் மேற்படி அடையாள அணிவகுப்பில் கலந்து கொள்ள திரு.சந்திரகுமார், முதல் நிலை காவலர், எண்.63, மற்றும் முதல் தலைமை காவலர் எண்.8 திரு.ஆர்.இளையராஜா ஆகியோர்களை நியமித்திருப்பதாக என்னிடம் கூறினார். பின்னர் சேலம் மத்திய சிறையில் இசைப்பள்ளி கலையரங்கத்தில் அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடு செய்துள்ளதாக சொல்லி என்னை உதவி ஜெயிலர் அழைத்து சென்று காட்டினார். நான் அந்த இடத்தை பார்வையிட்டு அது

அடையாள அணிவகுப்பு நடத்த உகந்த இடம் என்று உறுதி செய்து கொண்டேன். அடையாள அணிவகுப்பு தொடங்கிய நேரம் காலை 10.20 மணி ஆகும். பின்னர் சாட்சிகள் பொன்னுசாமி, ரவிகுமார் மற்றும் ஜெயராமன், ஆகியோர்களை சேலம் மத்திய சிறையில் காகிதம் தயாரிக்கும் கூடத்தில் வைக்குமாறு எனது அலுவலக உதவியாளரிடம் கூறினேன். அவர் மேற்படி சாட்சிகளை காகதிம் தயாரிக்கும் கூடத்தில் வைத்துவிட்டு என்னிடம் வந்து அது குறித்து தகவல் தெரிவித்தார். பின்னர் முதல் தலைமை காவலர் சந்தேக எதிரிகளையும், மற்ற சிறைக்கைதிகளையும், இசைப்பள்ளி கலையரங்கத்தின் முற்றத்தில் ஆஜர்படுத்தினார். எனது அலுவலக உதவியாளரை முற்றத்தை விட்டுவெளியே நிற்குமாறு கூறினேன். சாட்சிகள் வைக்கப்பட்ட இடத்திலிருந்தும் எனது அலுவலக உதவியாளர் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்தும் அடையாள அணிவகுப்பை யாரும் பார்க்க முடியாதவாறும், மற்றும் அடையாள அணிவகுப்பு முடியும் வரை வேறு யாரும் இந்த பகுதிக்குள் வராத வண்ணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததை உறுதி செய்து கொண்டேன்.

பின்னர் சந்தேக எதிரிகள் 1.சந்திரசேகர் 2.பிரகாஷ்(எ) சிவபிரகாஷ், 3 அருண் (எ) அருண்குமார் ஆகியோர்களை ரிமாண்ட் வாரண்ட் பெற்று சரி பார்த்து சந்தேக எதிரிகளை விசாரித்து உறுதி செய்து கொண்டேன். அடையாள அணிவகுப்பு நடத்த வந்திருப்பது குறித்து சந்தேக எதிரிகளிடம் தெரிவித்தேன். பின்னர் அடையாள அணிவகுப்பு நடத்த ஏதுவாக சிறைக்கைதிகளை ஒரே உருவ அமைப்புடன் ஒத்த நிறமுடைய, ஒத்த வயதுடைய, நபர்களை 3 சந்தேக எதிரிகளுடன் ஒத்து

போகும் அளவுள்ள 9 சிறைக்கைதிகளை தனித்தனியாக தேர்வு செய்து கொண்டேன். பின்னர் மேற்படி சந்தேக எதிரிகளை 1 முதல் 3 எதிரிகள் என்று வரிசைப்படுத்திக்கொண்டேன். பின்னர் ஒவ்வொருக்கும் தனித்தனியான ஒவ்வொரு சந்தேக எதிரிக்கும் 3 சாட்சிகளை வைத்து ஒன்றன் பின் ஒன்றாக அடையாள அணிவகுப்பு நடத்தலாம் என்று முடிவு செய்தேன்.

பின்னர் முதன்மை காவலர் 1வது சந்தேக எதிரியான சந்திரசேகர், த/பெ.சின்னுசாமி என்ற எதிரியையும் மற்ற சிறைக்கைதிகளையும் இசைப்ள்ளி கலையரங்கத்தில் ஆஜர்படுத்தினார். எனது அலுவலக உதவியாளரை இசைப்பள்ளி கலையரங்கத்தை விட்டு வெளியே நிற்குமாறு கூறினேன். சாட்சிகள் வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்தும் எனது அலுவலக உதவியாளர் நிறுத்தப்பட்டிருந்த இடத்திலிருந்தும் அடையாள அணிவகுப்பை யாரும் பார்க்க முடியாதவாறும் மற்றும் அணிவகுப்பு முடியும் வரை வேறு யாரும் இந்த பகுதிக்குள் வராத வண்ணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததை உறுதி செய்து கொண்டேன். சந்தேக எதிரி 1. சந்திரசேகரின் ரிமாண்ட் வாரண்டை பெற்று மீண்டும் ஒரு முறை உறுதி செய்து கொண்டேன். அடையாள அணிவகுப்பு நடத்த வந்திருப்பது குறித்து மீண்டும் தெரிவித்தேன்.

**<u>சந்தேக எதிரி சந்திரசேகரை பொறுத்து அடையாள அணிவகுப்பு</u>**

சந்தேக எதிரி சந்திரசேகர் என்பவரை பொறுத்து அவருடைய இருப்பிடத்திற்கு யாரும் பார்க்காதவாறு அழைத்து சென்று வைத்திருக்க முதன்மை தலைமை காவலரிடம் தெரிவித்தேன். சந்தேக எதிரி சந்திரசேகர் என்பவருடைய ஒத்த நிறமுடைய, உருவமுடைய,

வயதுடைய, சில சிறைக்கைதிகளை ஆஜர்படுத்த உதவி ஜெயிலரிடம் கூறினேன். பின்னர் அதிலிருந்து மேற்படி சந்தேக எதிரி சந்திரசேகரின் ஒத்த நிறமுடைய, உருவமுடைய, வயதுடைய 9 சிறைக்கைதிகளை தேர்வு செய்தேன். பின்னர் சந்தேக எதிரி மற்றும் 9 சிறைக்கைதிகளை வரவழைத்து அவர்களை தங்கள் விருப்பம் போல நின்று கொள்ளுமாறு கூறினேன். நான் கிழக்கு திசை நோக்கி அமர்ந்து கொண்டேன். சந்தேக எதிரி மற்றும் சிறைக்கைதிகள் எனக்கு எதிரே என்னை பார்த்தவாறு நிறுத்தி வைத்தேன்.

இதில் சாட்சி பொன்னுசாமி, ரவிகுமார், ஜெயராமன் ஆகிய சாட்சிகளை பொறுத்து முதல் சுற்றில் கீழ்கண்டவாறு இடமிருந்து வலமாக சந்தேக எதிரி மற்றும் 9 சிறைக்கைதிகள் நின்று கொண்டனர்.
1. கணேஷ்குமார், த/பெ.பழனிசாமி, வயது 22, கைதி எண்.ஆர்.பி.7043,
2.இளையரசன், த/பெ.மாதேஷ், வயது 27, கைதி எண்.டிபிடிஏ 5201,
3. பெரியசாமி, த/பெ.சிவபெருமாள், வயது 30, கைதி எண். டிபிடிஏ 5159,
4.ஜவகர், த/பெ.கணேசன், வயது 26, கைதி எண் ஆர்.பி.89,
5. ராமமூர்த்தி, த/பெ.துரைசாமி, வயது 32, கைதி எண்.ஆர்.பி.10493,
6. சந்திரசேகர்(சந்தேக எதிரி), த/பெ.சின்னுசாமி, வயது 31, கைதி எண். ஆர்பி.10471, 7.சக்திவேல், த/பெ.சிக்கன்ன செட்டி, வயது 27, கைதி எண்.ஆர்.பி.9631, 8.கௌதம், த/பெ.மஞ்சுநாத், வயது 28, கைதி எண்.ஆர்பி.10276, 9. உதய், த/பெ.கோவிந்தப்பா, வயது 31, கைதி எண்.ஆர்.பி.8117, 10.சீனிவாசன், த/பெ.ராஜ், வயது 39, கைதி எண்.ஆர்.பி.எண்.10049 வரிசையில் நின்றவர்களை மீண்டும் விசாரித்து உறுதி செய்து கொண்டு இதில் சந்தேக எதிரி 6வது நபராக

நின்றுகொண்டார். பின்னர் எனது அலுவலக உதவியாளரை அழைத்து முதலில் சாட்சி பொன்னுசாமியை அழைத்து வருமாறு கூறினேன். எனது அலுவலக உதவியாளர் சாட்சி பொன்னுசாமியை அழைத்து வந்து எனது அருகில் நிறுத்தினார். அலுவலக உதவியாளரை இசைப்பள்ளி கரையரங்கத்தின் வெளியே நிற்குமாறு கூறினேன். வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்பதை நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு சாட்சியிடம் கூறினேன். சாட்சி பொன்னுசாமி வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு 6வது நபராக நின்று கொண்டிருந்த சந்தேக எதிரி சந்திரசேகர் என்பவரை தொட்டு அடையாளம் காட்டி அவர்தான் எதிரி என்று கூறினார்.

பின்னிட்டு எனது அலுவலக உதவியாளரை அழைத்து சாட்சி பொன்னுசாமியை காகிதம் தயாரிக்கும் கூடத்தில் இருக்க வைத்துவிட்டு வந்து இசைப்பள்ளி கலையரங்கத்திற்கு வெளியே நிற்குமாறு கூறினேன். பின்னர் சாட்சி ரவிகுமாரை அலுவலக உதவியாளர் மூலம் அழைத்து வரச்சொன்னேன். அவர் சாட்சியை அழைத்து வந்து எனது அருகில் நிறுத்தினார். பின்னர் எனது அலுவலக உதவியாளரை இசைப்பள்ளி கலையரங்கத்திற்கு வெளியே நிற்குமாறு கூறினேன். பினனர் சாட்சியிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்பதை நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு சாட்சியிடம் கூறினேன். சாட்சி ரவிகுமார் வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு 6வது நபராக நின்ற சந்தேக எதிரி சந்திரசேகரை தொட்டு அடையாளம் காட்டி அவர்தான் எதிரி என்று கூறினார். பின்னர் எனது அலுவலக உதவியாளரை அழைத்து சாட்சி ரவிகுமாரை சேனிட்டரி நாப்கின்

தயாரிக்கும் கூடத்தில் இருக்க வைத்துவிட்டு வந்து, இசைப்பள்ளி கலையரங்கத்திற்கு வெளியே நிற்குமாறு கூறினேன்.

பின்னர் எனது அலுவலக உதவியாளரை அழைத்து சாட்சி ஜெயராமன் என்பவரை அழைத்து வருமாறு கூறினேன். அவர் சாட்சி ஜெயராமனை அழைத்து வந்து அருகில் நிறுத்தினார். பின்னர் அலுவலக உதவியாளரை இசைப்பள்ளி கலையரங்கத்திற்கு வெளியே நிற்குமாறு கூறிவிட்டு மேற்படி சாட்சி ஜெயராமனிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்பதை நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு சாட்சியிடம் கூறினேன். சாட்சி ஜெயராமன் வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு யாரையும் அடையாளம் காண்பிக்கவில்லை. பின்னிட்டு மேற்படி சாட்சி ஜெயராமனை அலுமினியம் பெயிண்ட் அடிக்கும் கூடத்தில் இருக்க வைக்க எனது அலுவலக உதவியாளரிடம் சொன்னேன். பின்னர் அலுவலக உதவியாளரை இசைப்பள்ளி கலையரங்கத்திற்கு வெளியே நிற்குமாறு சொன்னேன்.

சந்தேக எதிரி மற்றும் பிற கைதிகளை தங்கள் இஷ்ம் போல உடை மாற்றிக்கொண்டு தங்கள் இஷ்டம்போல வரிசையில் நிற்க கூறினேன். சாட்சி பொன்னுசாமி, ரவிகுமார், ஜெயராமன் ஆகிய சாட்சிகளை பொறுத்து 2வது சுற்றில் கீழ்கண்டவாறு இடமிருந்து வலமாக சந்தேக எதிரி மற்றும் 9 சிறைக்கைதிகள் நின்று கொண்டனர். 1. கணேஷ்குமார், த/பெ.பழனிசாமி, வயது 22, கைதி எண்.ஆர்பி.7043, 2.பெரியசாமி, த/பெ.சிவபெருமாள், வயது 30, கைதி எண்.டிபிடிஏ 5159, 3. சக்திவேல், த/பெ.சிக்கண்ண செட்டி, வயது 27, கைதி எண்.ஆர்.பி.9631,

4. சந்திரசேகர்,(சந்தேக எதிரி), த/பெ.சின்னுசாமி, வயது 31, கைதி எண்.ஆர்.பி.10471, 5. இளையரசன், த/பெ.மாதேஸ், வயது 27, கைதி எண்.டிபிடிஏ 5201, 6.ராமமூர்த்தி, த/பெ.துரைசாமி, வயது 32, கைதி எண்.ஆர்.பி.10493, 7.கௌதம், த/பெ.மஞ்சுநாத், வயது 28, கைதி எண்.ஆர்.பி.10276, 8.உதய், த/பெ.கோவிந்தப்பா, வயது 31, கைதி எண்.ஆர்.பி.8117, 9.சீனிவாசன், த/பெ.ராஜ், வயது 39, ஆர்.பி.10049, 10.ஜவகர், த/பெ.கணேசன், வயது 26, ஆர்.பி.89, மீண்டும் வரிசையில் நின்றவர்களை விசாரித்து உறுதி செய்து கொண்டேன். இதில் சந்தேக எதிரி 4வது நபராக நின்று கொண்டார்.

பின்னர் அலுவலக உதவியாளரை அழைத்து சாட்சி பொன்னுசாமியை அழைத்து வரும்படி சொன்னேன். அவர் சாட்சியை அழைத்து வந்து நிறுத்திவிட்டு இசைப்பள்ளி கலையரங்கத்திற்கு வெளியே நின்று கொண்டார். பின்னர் சாட்சி பொன்னுசாமியிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா என்பதை நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு சாட்சியிடம் கூறினேன். சாட்சி பொன்னுசாமி வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு வரிசையில் 4வது நபராக நின்று கொண்டிருந்த சந்தேக எதிரி சந்திரசேகர் என்பவரை தொட்டு அடையாளம் காட்டி அவர்தான் எதிரி என்று கூறினார்.

பின்னிட்டு அலுவலக உதவியாளரிடம் சாட்சி பொன்னுசாமியை காகதிம் தயாரிக்கும் கூடத்தில் இருக்க வைத்துவிட்டு கலையரங்கத்திற்கு வெளியே நிற்குமாறு கூறினேன். பின்னர் அலுவலக உதவியாளரிடம் சாட்சி ரவிகுமார் என்பவரை அழைத்து வருமாறு

கூறினேன். அவர் சாட்சியை அழைத்து வந்து நிறுத்திவிட்டு கலையரங்கத்திற்கு வெளியே நின்றார். பின்னர் சாட்சி ரவிகுமார் என்பவரிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்பதை நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு கூறினேன். சாட்சி ரவிகுமார் வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு 4வது நபராக நின்று கொண்டிருந்த சந்தேக எதிரி சந்திரசேகர் என்பவரை தொட்டு அடையாளம் காட்டி அவர்தான் எதிரி என்று கூறினார். பின்னிட்டு அலுவலக உதவியாளரிடம் சாட்சி ரவிகுமாரை சானிடரி நாப்கின் தயாரிக்கும் கூடத்தில் இருக்க வைத்துவிட்டு கலையரங்கத்திற்கு வெளியே நிற்குமாறு கூறினேன்.

பின்னர் அலுவலக உதவியாளரிடம் சாட்சி ஜெயராமன் என்பவரை அழைத்து வருமாறு கூறினேன். அவர் சாட்சியை அழைத்து வந்து அருகில் நிறுத்திவிட்டு கலையரங்கத்திற்கு வெளியே நின்றார். பின்னர் சாட்சி ஜெயராமனிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்பதை நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு கூறினேன். சாட்சி ஜெயராமன் வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு யாரையும் அடையாளம் காண்பிக்கவில்லை.

பின்னர் சாட்சி ஜெயராமனை அலுமினியம் பெயிண்ட் அடிக்கும் கூடத்தில் இருக்க வைத்துவிட்டு, கலையரங்கத்திற்கு வெளியே நின்றார். பின்னர் சந்தேக எதிரி மற்றும் பிற கைதிகளை தங்கள் இஸ்டம்போல வரிசையில் நிற்க கூறினேன். சாட்சிகள் பொன்னுசாமி, ரவிகுமார், ஜெயராமன் ஆகியோர்களை பொறுத்து 3வது சுற்றில் கீழ்கண்டவாறு இடமிருந்து வலமாக சந்தேக எதிரி மற்றும் 9

சிறைக்கைதிகள் நின்று கொண்டனர்.

1.உதய், த/பெ.கோவிந்தப்பா, வயது 31, ஆர்.பி.8117, 2. கணேஷ்குமார், த/பெ.பழனிசாமி, வயது 22, ஆர்.பி.7043, 3.பெரியசாமி, த/பெ.சிவபெருமாள், வயது 30, டிபிடிஏ 5159, 4. சக்திவேல், த/பெ.சிக்கன்ன செட்டி, வயது 27, ஆர்.பி.9631, 5.இளையரசன், த/பெ.மாதேஸ், வயது 27, டிபிடிஏ 5201, 6. ராமமூர்த்தி, த/பெ.துரைசாமி, வயது 32, ஆர்.பி.10493, 7.கௌதம், த/பெ.மஞ்சுநாத், வயது 28, ஆர்.பி.10276, 8.சீனிவாசன், த/பெ.ராஜ், வயது 39, ஆர்.பி.10049, 9.சந்திரசேகர்(சந்தேக எதிரி ) த/பெ.சின்னுசாமி, வயது 31, ஆர்.பி–10471, 10.ஜவகர், த/பெ.கணேசன், வயது 26, ஆர்.பி.89 இதில் வரிசையில் நின்றவர்களை மீண்டும் விசாரித்து உறுதி செய்து கொண்டேன். சந்தேக எதிரி 9வது நபராக நின்று கொண்டார்.

பின்னர் அலுவலக உதவியாளரிடம் சாட்சி பொன்னுசாமியை அழைத்து வருமாறு கூறினேன். அவர் சாட்சியை அழைத்து வந்து நிறுத்திவிட்டு வெளியே நின்றுகொண்டார். பின்னர் சாட்சி பொன்னுசாமியிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்பதை நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு கூறினேன். சாட்சி பொன்னுசாமி வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு 9வது நபராக நின்று கொண்டிருந்த சந்தேக எதிரி சந்திரசேகர் என்பவரை தொட்டு அடையாளம் காட்டி அவர்தான் எதிரி என்று கூறினார். பின்னர் அலுவலக உதவியாளரை சாட்சி பொன்னுசாமியை அவர் இருந்த காகிதம் தயாரிக்கும் கூடத்தில் இருக்க வைத்துவிட்டு சாட்சி ரவிகுமார் என்பவரை அழைத்து வருமாறு கூறினேன்.

சாட்சி ரவிகுமாரை அழைத்து வந்து நிறுத்திவிட்டு அலுவலக உதவியாளர் வெளியே நின்று கொண்டார். சாட்சி ரவிகுமாரிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்பதை நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு கூறினேன். சாட்சி ரவிகுமார் வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு 9வது நபராக நின்று கொண்டிருந்த சந்தேக எதிரி சந்திரசேகர் என்பவரை தொட்டு அடையாளம் காட்டி அவர்தான் எதிரி என்று கூறினார்.

பின்னிட்டு அலுவலக உதவியாளரை சாட்சி ரவிகுமாரரை அவர் இருந்த நாப்கின் தயாரிக்கும் கூடத்தில் இருக்க வைத்துவிட்டு சாட்சி ஜெயராமன் என்பவரை அழைத்து வருமாறு கூறினேன். அவர் சாட்சி ஜெயராமனை ஆஜர்படுத்திவிட்டு வெளியே நின்றுகொண்டார். சாட்சி ஜெயராமனிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்பதை நன்றாக பார்வையிட்டு அடையாளம் காண்பிக்குமாறு கூறினேன். சாட்சி ஜெயராமன் வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு யாரையும் அடையாளம் காண்பிக்கவில்லை.

பின்னிட்டு சாட்சியை அவர் இருந்த அலுமினியம் பெயிண்ட் அடிக்கும் கூடத்தில் இருக்க வைத்துவிட்டு வெளியே நிற்குமாறு கூறினேன்.

**<u>சந்தேக எதிரி பிரகாஷ் (எ) சிவபிரகாஷ் பொருத்து அடைாள அணிவகுப்பு</u>**

பின்னர் சாட்சிகள் பொன்னுசாமி, ரவிகுமார், ஜெயராமன் ஆகியோர்ளை பொறுத்து முதல் சுற்றில் கீழ்கண்டவாறு இடமிருந்து வலமாக சந்தேக எதிரி மற்றும் 9 சிறைக்கைதிகள் நின்று கொண்டனர்.

1. பிரசாந்த், த/பெ.செல்வம், வயது 27, டிபிடிஏ 5202, 2.சங்கர்கணேஷ், த/பெ.செல்வம், வயது 30, ஆர்.பி.10218, 3.மோகன், த/பெ.வெங்கடாசலம், வயது 36, ஆர்.பி.9893, 4.சந்தோஷ், த/பெ.மாதப்பா, வயது 25, ஆர்.பி.10415, 5. சீனிவாசன், த/பெ.திம்மப்பா, வயது 31, ஆ.ர்.பி.9476, 6.வீரகுமார், த/பெ.ஆறுமுகம், வயது 32, ஆர்.பி.10329, 7.பிரகாஷ் (எ)சிவபிரகாஷ்(சந்தேக எதிரி), த/பெ.ராஜா, வயது 29, ஆர்.பி.10472, 8.பிரதாப், த/பெ.ராஜா, வயது 26, ஆர்.பி.8946, 9.சுந்தரவேல், த/பெ.பாலகிருஷ்ணன், வயது 26, டிபிடிஏ 5213, 10.சீனிவாசன், த/பெ.முருகன், வயது 25, ஆர்.பி.10287 வரிசையில் நின்றவர்ளை மீண்டும் விசாரித்து உறுதி செய்து கொண்டேன். சந்தேக எதிரி 7வது நபராக நின்று கொண்டார்.

பின்னர் சாட்சி பொன்னுசாமியை அழைத்து வருமாறு அலுவலக உதவியாளரிடம் தெரிவித்து அவர் சாட்சி பொன்னுசாமியை அழைத்து வந்து நிறுத்திவிட்டு வெளியே நின்று கொண்டார். சாட்சி பொன்னுசாமியிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்பதை நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு சாட்சியிடம் கூறினேன். சாட்சி பொன்னுசாமி வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு சந்தேக எதிரியை அடையாளம் காண்பிக்கவில்லை. தவறாக வேறு ஒரு நபரை அடையாளம் காண்பித்தார். பின்னர் அவரை அவர் இருந்த இடத்திற்கு நிறுத்திவிட்டு சாட்சி ரவிகுமாரை ஆஜர்படுத்த அலுவலக உதவியாளரிடம் தெரிவித்தேன். சாட்சி ரவிகுமாரை ஆஜர்படுத்திவிட்டு அவர் வெளியே நின்று கொண்டார். சாட்சி ரவிகுமாரிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்பதை

நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு கூறினேன். சாட்சி ரவிகுமார் வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு 7வது நபராக நின்று கொண்டிருந்த சந்தேக எதிரி பிரகாஷ் (எ) சிவபிரகாஷ் என்பவரை தொட்டு அடையாளம் காட்டி அவர்தான் எதிரி என்று கூறினார். பின்னர் அவரை அவர் இருந்த நாப்கின் தயாரிக்கும் கூடத்தில் இருக்க வைத்துவிட்டு சாட்சி ஜெயராமனை அழைத்து வருமாறு அலுவலக உதவியாளரிடம் கூறினேன். அவர் சாட்சி ஜெயராமனை ஆஜர்படுத்திவிட்டு அவர் வெளியே நின்றுகொண்டார். பின்னர் சாட்சி ஜெயராமனிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா என்பதை நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு கூறினேன். சாட்சி ஜெயராமன் வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு யாரையும் அடையாளம் காண்பிக்கவில்லை. பின்னர் அலுவலக உதவியாளரை அழைத்து அவர் இருந்த அலுமினியம் பெயிணிட் அடிக்கும் கூடத்தில் இருக்க வைத்துவிட்டு கலையரங்கத்திற்கு வெளியே நிற்குமாறு கூறினேன்.

பின்னர் சந்தேக எதிரி மற்றும் பிற கைதிகளை தங்கள் இஸ்டம்போல உடைகளை மாற்றி தங்கள் இஷ்டம்போல வரிசையில் நிற்குமாறு கூறினேன். இதில் 2வது சுற்றில் மேற்படி சாட்சிகளை பொறுத்து இடமிருந்து வலமாக சந்தேக எதிரி மற்றும் 9 சிறைக்கைதிகள் நின்று கொண்டனர். 1.பிரதாப், 2, பிரசாந்த், 3.பிரகாஷ் (எ) சிவபிரகாஷ்(சந்தேக எதிரி), 4. சந்தோஷ், 5.சுந்தரவேல், 6.வீரகுமார், 7.சங்கர்கணேஷ், 8.சீனிவாசன், த/பெ.திம்மப்பா, 9.மோகன், 10.சீனிவாசன், த/பெ.முருகன் வரிசையில் நின்றவர்களை விசாரித்து

மீண்டும் உறுதி செய்து கொண்டேன். இதில் சந்தேக எதிரி 3வது நபராக நின்று கொண்டார். பின்னர் அலுவலக உதவியாளரை அழைத்து சாட்சி பொன்னுசாமியை அழைத்துவர கூறினேன். அவர் சாட்சி பொன்னுசாமியை அழைத்து வந்து நிறுத்திவிட்டு வெளியே நின்று கொண்டார். பின்னர் சாட்சி பொன்னுசாமியிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்பதை நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு கூறினேன். சாட்சி பொன்னுசாமி வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு சந்தேக எதிரியை அடையாளம் காண்பிக்கவில்லை. தவறாக வேறு ஒரு நபரை அடையாளம் காண்பித்தார்.

பின்னர் சாட்சி பொன்னுசாமியை காகிதம் தயாரிக்கும் கூடத்தில் இருக்க வைத்துவிட்டு சாட்சி ரவிகுமாரை அழைத்து வரும்படி கூறினேன். அலுவலக உதவியாளர் சாட்சி ரவிகுமாரை ஆஜர்படுத்திவிட்டு வெளியே நின்றுகொண்டார். சாட்சி ரவிகுமாரிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்பதை நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு கூறினேன். சாட்சி ரவிகுமார் வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு 3வது நபராக நின்று கொண்டிருந்த சந்தேக எதிரி பிரகாஷ் (எ) சிவபிரகாஷ் என்பவரை தொட்டு அடையாளம் காட்டி அவர்தான் எதிரி என்று கூறினார். பின்னர் அலுவலக உதவியாளரை அழைத்து சாட்சி ரவிகுமாரை சானிடரி நாப்கின் தயாரிக்கும் கூடத்தில் இருக்க வைத்துவிட்டு, சாட்சி ஜெயராமனை ஆஜர்படுத்துமாறு கூறினேன். சாட்சி ஜெயராமனை ஆஜர்படுத்திவிட்டு அவர் கலையரங்கத்திற்கு வெளியே நின்று

கொண்டார். சாட்சி ஜெயராமனிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்பதை நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு கூறினேன். சாட்சி ஜெயராமன் வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு யாரையும் அடையாளம் காண்பிக்கவில்லை. பின்னர் அவரையும் அவர் இருந்த இடத்திலேயே அழைத்து சென்று இருக்க வைத்து விட்டு வெளியே இருக்குமாறு அலுவலக உதவியாளரிடம் கூறினேன்.

பின்னர் சந்தேக எதிரி மற்றும் பிற கைதிகளை தங்கள் இஸ்டம்போல உடைகளை மாற்றி தங்கள் இஸ்டம்போல வரிசையில் நிற்க கூறினேன். மேற்படி சாட்சிகளை பொறுத்து 3வது சுற்றில் கீழ்கண்டவாறு இடமிருந்து வலமாக சந்தேக எதிரி மற்றும் 9 சிறைக்கைதிகள் நின்று கொண்டனர். 1. பிரசாந்த், 2. பிரதாப், 3.சந்தோஷ், 4.சுந்தரவேல், 5. வீரகுமார், 6. பிரகாஷ்(எ)சிவபிரகாஷ்(சந்தேக எதிரி), 7.சங்கர் கணேஷ், 8.மோகன், 9.சீனிவாசன், த/பெ.திம்மப்பா, 10.சீனிவாசன், த/பெ.முருகன் வரிசையில் நின்றவர்களை மீண்டும் விசாரித்து உறுதி செய்து கொண்டேன். மேற்சொன்னவாறே சாட்சி பொன்னுசாமியை அழைத்து வருமாறு அலுவலக உதவியாளரிடம் தெரிவித்து அதன்படி அவர் சாட்சியை அழைத்து வந்து நிறுத்திவிட்டு வெளியே நின்று கொண்டார். சாட்சி பொன்னுசாமியிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்று நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு கூறினேன். சாட்சி பொன்னுசாமி வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு சந்தேக எதிரியை அடையாளம் காண்பிக்கவில்லை. தவறாக வேறு ஒரு நபரை அடையாளம்

காண்பித்தார். அறிக்கையில் சொன்னவாறு சாட்சியை அவர் இருந்த இடத்தில் வைத்துவிட்டு சாட்சி ரவிகுமாரை ஆஜர்படுத்த அலுவலக உதவியாளரிடம் தெரிவித்தேன். அவர் சாட்சியை ஆஜர்படுத்திவிட்டு வெளியே நின்று கொண்டார். பின்னர் சாட்சி ரவிகுமாரிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா என்பதை நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு கூறினேன். சாட்சி ரவிகுமார் வரிசையில் நின்றவர்களை பார்த்து 6வது நபராக நின்று கொண்டிருந்த சந்தேக எதிரி பிரகாஷ்(எ)சிவபிரகாஷ் என்பவரை தொட்டு அடையாளம் காட்டி அவர்தான் எதிரி என்று கூறினார். அறிக்கையில் சொன்னவாறே அவரையும் அவர் இடத்தில் நிற்க வைத்துவிட்டு சாட்சி ஜெயராமனை அழைத்து வருமாறு அலுவலக உதவியாளரிடம் கூறினேன். சாட்சி ஜெயராமனை அழைத்து வந்துவிட்டு அவர் வெளியே நின்று கொண்டார். சாட்சி ஜெயராமனிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா என்று நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு கூறினேன். சாட்சி ஜெயராமன் வரிசையில் நின்றவர்களை பார்த்து யாரையும் அடையாளம் காண்பிக்கவில்லை. பின்னர் அறிக்கையில் கூறியவாறு அவரை அவர் இருந்த இடத்தில் இருக்க வைத்துவிட்டு வருமாறு கூறினேன்.

**<u>சந்தேக எதிரி அருண் (எ) அருண்குமார் என்பவரை பொறுத்து அடையாள அணிவகுப்பு</u>**

சாட்சிகளை பொறுத்து 1வது சுற்றில் கீழ்கண்டவாறு இடமிருந்து வலமாக சந்தேக எதிரி மற்றும் 9 சிறைக்கைதிகள் நின்று கொண்டனர். 1. சரவணன், த/பெ.முனியப்பன், வயது 40, டிபிடிஏ 5197, 2. சின்னசாமி,

த/பெ.கோவிந்தன், வயது 26, டிபிடிஏ 5199, 3.சம்பத்குமார், த/பெ.பழனிசாமி, வயது 48, ஆர்.பி.10482, 4.கேசவன், த/பெ.மாதப்பா, வயது 38, ஆர்.பி.10414, 5.பாலாஜி, த/பெ.கோவிந்தப்பா, வயது 27, ஆர்.பி.31, 6.அருண்(எ)அருண்குமார் (சந்தேக எதிரி) ,த/பெ.கண்ணையன், வயது 24, ஆர்.பி.10470, 7.ராஜ்குமார், த/பெ.மஞ்சப்பன், வயது 25, ஆர்.பி.10053, 8.ராஜா, த/பெ.சீனிவாசன், வயது 27, ஆர்.பி.9784, 9.பாபுவெங்கடேஷ், த/பெ.ரங்கசாமி, வயது 48, ஆ்ர்.பி.9870, 10.கோவிந்தராஜ், த/பெ.வெங்கடாசலம், வயது26, டிபிடிஏ 5128, வரிசையில் நின்றவர்களை விசாரித்து மீண்டும் உறுதி செய்து கொண்டேன். இதில் சந்தேக எதிரி 6வது நபராக நின்று கொண்டார்.

நான் அறிக்கையில் சொன்னவாறு சாட்சி பொன்னுசாமியை அழைத்து வந்து ஆஜர் படுத்த சொன்னேன். அதன்படி சாட்சி பொன்னுசாமியிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்பதை நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு சாட்சியிடம் கூறினேன். அவர் வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு சந்தேக எதிரியை அடையாளம் காட்டவில்லை, தவறாக வேறு ஒரு நபரை அடையாளம் காண்பித்தார். அதேபோல அறிக்கையில் சொன்னவாறு சாட்சி ரவிகுமாரை ஆஜர்படுத்த சொன்னேன். அவரிடமும் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்பதை நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு கூறினேன். சாட்சி ரவிகுமார் வரிசையில் நின்றவர்களை பார்த்து 6வது நபராக நின்று கொண்டிருந்த சந்தேக எதிரி அருண்(எ)அருண்குமாரை தொட்டு அடையாளம் காட்டி அவர்தான் எதிரி என்று அடையாளம் காண்பித்தார். அதேபோல

அறிக்கையில் சொன்னவாறு சாட்சி ஜெயராமனை ஆஜர்படுத்தி அவரிடமும் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா என்று நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு கூறியபோது சாட்சி ஜெயராமன் வரிசையில் நின்றவர்களை பார்த்து யாரையும் அடையாளம் காண்பிக்கவில்லை. அறிக்கையில் சொன்னவாறு சாட்சிகளை அவர்களது இடத்தில் இருக்க வைத்துவிட்டு சந்தேக எதிரி மற்றும் பிற கைதிகளை தங்கள் இஸ்டம்போல உடைகளை மாற்றி வரிசையில் நிற்க கூறினேன். மேற்படி சாட்சிகளை பொறுத்து 2வது சுற்றில் இடமிருந்து வலமாக சந்தேக எதிரி மற்றும் 9 சிறைக்கைதிகள் நின்று கொண்டனர். 1. ராஜ்குமார், 2.ராஜா.3.கோவிந்தராஜ். 4.சரவணன், 5.சின்னசாமி, 6.அருண்(எ)அருண்குமார்(சந்தேக எதிரி), 7.பாபு வெங்கடேஷ், 8.பாலாஜி, 9.கேசவன், 10.சம்பத்குமார் வரிசையில் நின்றவர்களை மீண்டும் விசாரித்து உறுதி செய்து கொண்டேன். இதில் சந்தேக எதிரி 6வது நபராக நின்று கொண்டார். அறிக்கையில் சொன்னவாறு ஒவ்வொரு சாட்சியையும் தனித்தனியாக அழைத்து வர சொன்னேன்.

சாட்சி பொன்னுசாமி வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு சந்தேக எதிரியை அடையாளம் காண்பிக்கவில்லை, தவறாக வேறு ஒரு நபரை அடையாளம் காண்பித்தார். பின்னர் சாட்சி ரவிகுமாரை அழைத்து வந்து அவரிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்று அடையாளம் காண்பிக்குமாறு கூறியபோது அவர் வரிசையில் 6வதுநபராக நின்று கொண்டிருந்த சந்தேக எதிரி அருண்(எ)அருண்குமாரை என்பரை தொட்டு அடையாளம் காட்டி அவர்தான் எதிரி என்று கூறினார். பின்னர் அறிக்கையில் சொன்னவாறு

சாட்சி ஜெயராமனை அழைத்து வந்து அணிவகுப்பில் உள்ளவர்களை பார்வையிட்டு அடையாளம் காண்பிக்குமாறு கூறியபோது அவர் யாரையும் அடையாளம் காண்பிக்கவில்லை. பின்னர் அறிக்கையில் சொன்னவாறு அவர்களை அவர்களது இடத்தில் இருக்க வைத்து விட்டு சந்தேக எதிரி மற்றும் பிற கைதிகளை அவர்கள் இஸ்டம்போல உடைகளை மாற்றி இஸ்ம்போல வரிசையில் நிற்க கூறினேன். சாட்சிகளை பொறுத்து 3வது சுற்றில் கீழ்கண்டவாறு இடமிருந்து வலமாக சந்தேக எதிரி மற்றும் 9 சிறைக்கைதிகள் நின்று கொண்டனர்.

1. சம்பத்குமார்,2. ராஜ்குமார், 3.அருண்(எ)அருண்குமார்(சந்தேக எதிரி), 4.ராஜா, 5.சரவணன், 6.கோவிந்தராஜ்.. 7.சின்னசாமி, 8.பாபுவெங்கடேஷ், 9.பாலாஜி. 10.கேசவன் வரிசையில் நின்றவர்களை மீண்டும் விசாரித்து உறுதி செய்து கொண்டேன். சந்தேக எதிரி 3வது நபராக நின்று கொண்டார். நான் அறிக்கையில் சொன்னவாறு சாட்சி பொன்னுசாமியை அழைத்து வருமாறு கூறினேன். அவர் வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு சந்தேக எதிரியை அடையாளம் காண்பிக்கவில்லை. தவறாக வேறு ஒரு நபரை அடையாளம் காண்பித்தார். அறிக்கையில் சொன்னவாறு அவரை அவரது இடத்தில் இருக்க வைக்க சொன்னேன். பின்னர் சாட்சி ரவிகுமாரை ஆஜர்படுத்தியதில் அவரிடம் வழக்கின் எதிரி அணிவகுப்பில் இருக்கிறாரா? என்று நன்றாக பார்த்து அடையாளம் காண்பிக்குமாறு கூறினேன். சாட்சி ரவிகுமார் வரிசையில் நின்றவர்களை பார்வையிட்டு 3வது நபரக நின்று கொண்டிருந்த சந்தேக எதிரி அருண்(எ)அருண்குமாரை தொட்டு அடையாளம் காட்டி அவர்தான்

எதிரி என்று கூறினார். பின்னர் அவரை அவரது இடத்தில் இருக்க வைத்து விட்டு சாட்சி ஜெயராமனை அழைத்து வரும்படி கூறினேன். அவர் அடையாள அணிவகுப்பில் நின்றவர்களை பார்வையிட்டு யாரையும் அடையாளம் காண்பிக்கவில்லை. பின்னர் சாட்சிகளை அவர்களது இடத்தில் இருக்க வைத்துவிட்டு அலுவலக உதவியாளரை வெளியே நிற்குமாறு கூறிவிட்டு சந்தேக எதிரிகள் 1. சந்திரசேகர், 2.பிரகாஷ்(எ) சிவபிரகாஷ், 3. அருண் (எ) அருண்குமார் ஆகியோரிடம் அடையாள அணிவகுப்பில் கலந்து கொண்டதற்கும், மற்றும் 27 சிறைக் கைதிகளிடமும் கையொப்பம் பெற்றுக்கொண்டேன்.

பின்னிட்டு அடையாள அணிவகுப்பு குறித்து ஏதேனும் சொல்லவேண்டுமா என்று சந்தேக எதிரிகளிடம் கேட்டபோது சந்தேக எதிரி சந்திரசேகர் காவல்நிலையத்தில் எங்கள் 3 பேரையும் நிற்க வைத்து போட்டோ எடுத்து காண்பித்தனர் என்று கூறினார். பிரகாஷ்(எ)சிவபிரகாஷ் காவல்நிலையத்தில் போட்டோ எடுத்து நிறைய பேரை கூட்டி வந்து அடையாளம் காட்டினார்கள் என்று கூறினார். சந்தேக எதிரி அருண்(எ)அருண்குமார் காவல்நிலையத்தில் இந்த நபர்களை கூட்டி வந்து என்னை அடையாளம் காண்பித்தார்கள் என்று கூறினார். என்னுடைய கேள்வி மற்றும் சந்தேக எதிரிகளின் பதில்களை தனித்தனி தாள்களில் பதிவு செய்து சந்தேக எதிரிகளிடம் கையொப்பம் பெற்றேன்.

பின்னர் சந்தேக எதிரிகளையும் அணிவகுப்பில் கலந்து கொண்டசிறைக் கைதிகளையும் அவர்களுடைய அறையில் விடுமாறு உதவி ஜெயிலரிடம் கூறினேன். பின்னர் அலுவலக உதவியாளரை

அழைத்து சாட்சிகள் பொன்னுசாமி, ரவிகுமார் மற்றும் ஜெயராமனை அழைத்து வரச்செய்து சந்தேக எதிரிகளின் அடையாள அணிவகுப்பில் கலந்து கொண்டதற்கு சாட்சிகளிடமும் சந்திரகுமார், முதல்நிலை காவலர், மற்றும ஆர்.இளையராஜா முதல் தலைமை காவலர் ஆகியோரிடம் கையொப்பம் பெற்றேன்.

**<u>எனது அறிக்கையின் முடிவு</u>**

1வது சாட்சி, சந்தேக எதிரி சந்திரசேகரை பொறுத்து 3 சுற்றுகளிலும் சரியாக அடையாளம் காண்பித்தார். 1வது சாட்சி சந்தேக எதிரி பிரகாஷ்(எ)சிவபிரகாஷை பொறுத்து 3 சுற்றுகளிலும் சரியாக அடையாளம் காட்டவில்லை. 1வது சாட்சி, சந்தேக எதிரி அருண்(எ) அருண்குமாரை பொறுத்து 3 சுற்றுகளிலும் சரியாக அடையாளம் காட்டவில்லை.

2வது சாட்சி, சந்தேக எதிரி சந்திரசேகரை பொறுத்து 3 சுற்றுகளிலும் சரியாக அடையாளம் காண்பித்தார். 2வது சாட்சி, சந்தேக எதிரி பிரகாஷ்(எ)சிவபிரகாஷை பொறுத்து 3 சுற்றுகளிலும் சரியாக அடையாளம் காண்பித்தார். 2வது சாட்சி, சந்தேக எதிரி அருண்(எ)அருண்குமாரை பொறுத்து 3 சுற்றுகளிலும் சரியாக அடையாளம் காண்பித்தார்.

3வது சாட்சி, எந்த சந்தேக எதிரிகளையும் 9 சுற்றுகளிலும் அடையாளம் காண்பிக்கவில்லை.

அடையாள அணிவகுப்பு முடியும் வரை அடையாள அணிவகுப்பை வேறு யாரும் பார்க்காத வண்ணம் பார்த்துக்கொண்டேன். சந்தேக

எதிரிகளை யாரும் சாட்சிகளுக்கு அடையாளம் காட்டிவிடாதபடி பார்த்துக்கொண்டேன். அடையாள அணிவகுப்பு முடிந்த நேரம் மதியம் 01.45 மணி. பின்னர் எனது அறிக்கை மற்றும் மத்திய சிறை கண்காணிப்பாளருக்கு அனுப்பிய கடிதம் அலுவலக நகல் , சாட்சிகளிடம் சார்வ் செய்யப்பட்ட சம்மன், மத்திய சிறையில் அடையாள அணிவகுப்பு நடத்த தயார் செய்யப்பட்ட குறிப்புகள் மற்றும் சந்தேக எதிரிகளிடம் கேட்கப்பட்ட கேள்விகள் மற்றும் அதற்கான பதில்கள், அடையாள அணிவகுப்பில் கலந்து கொண்ட சாட்சிகளிடம் கையொப்பம் பெற்ற தாள் மற்றும் அடையாள அணிவகுப்பில் கலந்து கொண்ட சிறை அலுவலர்கள்கையெழுத்து செய்து கொடுத்த தாள் ஆகிய 1 முதல் 6 இணைப்புகளை இணைத்து அடையாள அணிவகுப்பு அறிக்கையுடன் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.5 நீதிமன்ற D.No.1433/2018 dated 20/07/2018ல் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். நான் அனுப்பிய அடையாள அணிவகுப்பு அறிக்கை இணைப்புடன் கூடியது அ.சா.ஆ.11 ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜர், எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்து.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.